| | |
|---|---|
| Publication | Seithi Mediacorp |
| Coverage | Singapore |
| Date | 13 March 2015 |
| Title | SG Mark |
| | |




## உடலின் மதுபான அளவைக் காட்டும் மூச்சுக் கருவி - கைத்தொலைபேசியில்

13/3/2015 18:48 Update: 13/3/2015 19:40

design business chamber singapore

| | |
|---|---|
| Publication | Seithi Mediacorp |
| Coverage | Singapore |
| Date | 13 March 2015 |
| Title | SG Mark |
| | |

**சிங்கப்பூர்**: உடலின் மதுபான அளவைக் காட்டும் பிரெத்தலைசர் (breathalyser) மூச்சுக் கருவி கையடக்கத் தொலைபேசிகளில் வரவிருக்கிறது. இரண்டே மாதங்களில் விற்பனைக்கு வருகிறது ஊப்சி (OOPSY) என்ற அத்தகைய கருவி. ஆண்டுதோறும் வழங்கப்படும் Singapore Good Design Mark Awards எனும் சிறந்த புத்தாக்க வடிவமைப்புகளுக்கு வழங்கப்படும் விருதுகளில் ஒன்றை இவ்வாண்டு வென்றது ஊப்சி. இக்கருவியைக் Infini Square நிறுவனம் கண்டுபிடித்துள்ளது.




[உடலின் மதுபான அளவைக் காட்டும் OOPSY.]

கால்சட்டைப் பையில் அடங்கும் இக்கருவிக்குள் ஊதும்போது Oopsy கையடக்கத் தொலைபேசிப் பயனீடு ஒருவரின் உடலிலிருக்கும் மதுபான அளவை வெளிப்படுத்துகிறது.

இவ்வாண்டின் விருது நிகழ்ச்சியில் மொத்தம் எண்பத்து மூன்று விருதுகள் வழங்கப்பட்டன. அவற்றில் ஒன்றை வென்றது, சிங்கப்பூரின் பழம்பெரும் உணவு நிறுவனமான Killiney. இவ்வாண்டிற்கென மட்டுமே அறிவிக்கப்பட்ட சிங்கப்பூர் ஐம்பது சிறப்புப் பிரிவில் அது வென்றது.
தொண்ணூற்றாறு ஆண்டுகளாக வியாபாரத்தை நன்கு மேம்படுத்தி வரலாற்றில் இடம்பிடித்ததற்காக கௌரவிக்கப்பட்டது கில்லினி Killiney.